ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

அவித்தை, அஹங்காரம், ராகம், துவேஷம், அபிநிவேசம் ஆகிய ஐந்து கிலேசங்களை சுபகர்மங்களைச்செய்து விலக்கிக்கொண்டுஸர்வபிராணிகளும் ஸௌக்கியத்தையடையவேண்டுமென்றகருணையுடன் பரமேசுவரன் பிராணிகளுக்களித்திருக்கும் இந்திரியங்களைக்கொண்டும் தேஹத்தைக் கொண்டும் பிராணிகள் அனர்த்தத்தைத் தேடிக்கொள்ளுகிறார்களேயன்றி க்ஷேமத்தையடைய வழியைத்தேடுவதில்லை. இத்தகையபிராணிகளின் ஸ்வபாவத்தையறிந்தே தன் போக்காய்போன இந்திரியங்களின் வியாபாரங்களால் நேரிட்டபாபங்களை விலக்கிக்கொள்வதற்காக அநேககர்மங்களைவேதவாயிலாக வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொருநாளிலும் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேர்ந்த பாபங்களை ஜன்ம மத்தியில் ஒருநாளிலனுஷ்டிக்கப்பட்ட கர்மத்தால் அவை போக்கமுடியாவென நித்திய கர்மங்களையும் ஒவ்வொரு ஸந்தியிலுமனுஷ்டிக்கும்படியாக விரித்துள்ளார். அவற்றுள் ஸந்தியாவந்தனமென்பது ஓர் முக்கியமான கர்மமாகும். அதில் பூர்வாங்கோத்தராங்க ஸஹிதமான பிரதானகர்மங்களாகிய அர்க்கியதானம் ஆத்மதியானம் காயத்ரீஜபம், இவைகளைச்செய்து அந்தந்தவேளையில் செய்தபாபங்களை விலக்கிக்கொள்ளவேண்டியது. இந்தக்கருத்து அந்தஸந்தியாகர்மத்தில் உபயோகிக்கப்படும் மந்திரங்களின் பொருள்களிலிருந்து வெளிப்படுகிறது. மனோவாக்காயாதிகளால் காமக்ரோதங்களுக்கு வசப்பட்டு செய்யும்பாபங்களெல்லாம் போகுமென்று தெரிகிறது. ஜலாபிமானி தேவதையினருளால் சுபமான அன்னபானாதிகளும் பெருமைபொருந்திய நல்ல அறிவும் தீர்க்காயுஸ்ஸும் ஆரோக்கியமும் நல்ல ஸந்ததியும் இவைபோன்ற அநேக திருஷ்ட பலன்களும் மறுமையில் உத்தமலோகங்களும் கிடைக்குமெனத் தெரிகிறது. நம்முன்னோர்களான ரிஷிகளும் நீண்டகாலம் ஸந்தியோபாஸ்தி செய்துவந்ததால் தீர்க்காயுஸ்ஸையடைந்தார்களெனஸ்மிருதிகளில் வெளிப்படை. அத்தகைய புண்ணியகர்மங்களைச்சரிவர அனுஷ்டிக்காத தோஷத்தாற்றான் இக்காலத்தில் பிராணிகள் அல்பாயுஸ்ஸுக்களாகவும் ஆரோக்கியமில்லாதவர்களாகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் இந்த கஷ்டங்களுக்கு கர்மத்தை விட்டதே காரணமென்று தெரிந்துகொள்ளாமல் வெவ்வேறு காரணங்களைக் கற்பித்துக்கொண்டு சீர்திருத்த வழிதேடுகிறார்கள், அப்படிக்கில்லாமல் எல்லோரும் பெரியோர்களிடமிருந்து உண்மையை தெரிந்துகொண்டு நல்லகாரியங்களைச் செய்து நன்மையை அடைவார்களாக,

சுபம் !

பத்திராதிபர்.

ஓ

திருச்சி அத்வைத சபை.

ஆசாரிய மஹிமை.

திருச்சியில் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு சங்காராசார்யஸ்வாமிகள் அவர்களின் அநுக்கிரஹத்தாலும் நங்கவரம் மகா-ள-ள-ஸ்ரீ சுப்பராமய்யர் அவர்களின் போஷணையினுலும் அனேக கனதனவான்களின் பெரும் முயற்சியாலும், மகா-ள-ள-ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள் காரியதரிசிஸ்தானத்தை வகித்து சிலவருஷங்களாக அத்வைத ஸபையை நடத்தி வருகிறார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயமே. அதில் இவ்வருஷத்திய ஸபை 9-வது வருஷத்தியதாகும். அது துலாமாஸத்திலேயே இதுவரை நடந்துவந்ததுபோல் இவ்வருஷத்திலும் நாளது வருஷம் ஐப்பசி-மீ 17உ முதல் நடத்த முயற்சித்தும் இடையில் நேர்ந்த வெள்ளத்தினுல் அப்பொழுது நடத்தமுடியாமல் கார்த்திகை-மீ 1உ முதல் நடத்தப்பட்டது. அதில் வழக்கம்போல் அத்வைதசாஸ்திர பண்டிதர்கள் விஜயமாய் இருந்தார்கள். வித்தியார்த்திகளும் வந்து பரீக்ஷை கொடுத்தார்கள். அதில் வழக்கம்போல் பத்து உபன்யாஸங்கள் நடந்தன. அதில் முதலாவது உபன்யாஸம் ஸந்தியோபாஸன மந்திரங்கள் என்பதாம். அதில் ஸந்தியோபஸனத்தில் உபதேசிக்கப்படும் மந்திரங்களின் அர்த்தஞானம் அவசியமென்றும் அதை எப்படியாவது தெரிந்துகொண்டு செய்யவேண்டுமென்றும்உபநியஸிக்கப்பட்டது. இரண்டாவது உபன்யாஸம் ஆசார்யமஹிமை,ஷட்தர்சினி என்பதாகும். அதை ப்ர்ஹ்மஸ்ரீபோலகம் சுந்தரேசசாஸ்திரிகள் அழகாய் உபன்யஸித்தார்கள், அதன் ஸாராம்சமாவது— ஆசார்யாளுடைய அருள்பெற்றவனே நல்லறிவையடைவான். அந்தப்போறிவாற்ருன் பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷம் கிடைக்கும். அக்ஞான

க்ற்பிதமான பந்தம் ஞானமில்லாவிடில் விலகமாட்டாதாகையால் மோக்ஷமும்கிடைக்காது. ஆகையால் மோக்ஷமடைய ஞானத்தை விட வேறுவழியில்லையென சுருதிகளின் கருத்து. அதனுற்றான் பகவானும்"ஞானத்திற்கொப்பான புனிதமான வஸ்துவேஇல்லை" என்று கீதையில் உபதேசித்தார். ப்ரம்மா முதல் புழு பரியந்த மான பிராணிகளிடத்தில் உயர்வு தாழ்வு பாவிக்கப்படுவது ஞான தாரதம்மியத்தால் என்று சாஸ்திர ஸித்தாந்தம். வேறு எவ்வளவு பெருமை பெற்றாலும் ஞானமில்லாவிடில் உயர்ந்தவனுக பாவிக்கப் படமாட்டான். அந்த ஞானமொன்றுமாத்திரம் இருந்துவிட் டால் மிகவும் சிரேஷ்டனுக சிலாகிக்கப்படுவான். அத்தகைய மேலான நல்லறிவை நிரதிசயமாக அடைந்தவனே ஆசிரியனெனப் படுவான். ஆகவே அந்த ஞானத்தையடைய விரும்புகிறவன் அந்த ஆசாரியனையே அடையவேண்டும். இது நியாயத்திற்கும் ஒத்ததே. எவன் எந்த வஸ்துவை அபேக்ஷிக்கிறனே அவன் அந்த வஸ்து நிறைந்தவனை ஆசிரயிப்பானென்பது பிரஸித்தமே. உதாரணமாக— பணத்தை விரும்புகிறவன் பணக்காரனை ஆச்ர யிக்கிறன். பசுக்களை அபேக்ஷிக்கின்றவன் பசுக்கள் நிறைந்தவ னிடம் செல்லுகிறன். குதிரை வேண்டுமென்று அபேக்ஷித்த வன் அவைகள் அதிகமாயுள்ள தேசம்போகிறன். இதுபோலவே ஞானத்தை விரும்பியவன் ஞானம் நிறைந்த ஆசாரியனை ஆச்ர யிக்கவேண்டுமென்பது பொருத்தமுடையதே. ஆனால் சிலர் நல் லறிவைப்பெற்றும் வஞ்சனை செய்வதற்காக உள்ளதை உள்ளபடி சொல்லமாட்டார். அவர்களை ஆச்ரயித்தால் இஷ்டப்பட்டது கிடைக்காமல் போவதோடுமாத்திரமாயில்லாமல் "अंधगोलाङ्गूल-न्याय"த்தால் அனர்த்தத்தையுமடையவேண்டியதாய்விடும். அதா வது ஒரு வழிப்போக்கன் தனக்கிஷ்டமான ஒரு கிராமத்தை அடைய வழிதெரியாமல் அதையறிந்த அவ்விடத்திலுள்ள ஒரு புருஷனைக் கேழ்க்க. அவன் அதை நன்றாகத் தெரிந்துகொண்டி ருந்தும் அந்த வழிப்போக்கனை மாற்றக்கருதி, பக்கத்திலிருந்த மொரட்டு மாட்டின் வாலைப்பிடித்துக்கொடுத்து இதை விடாமல் கெட்டியாய் பிடித்துக்கொண்டாயேயானல் உன்னைக் கிராமத்தில் கொண்டுவிட்டுவிடுமென்று சொல்லிவிடுவானுகில், வழிப்போக்கன் அதை நம்பிக்கொண்டு வாலை விடாமல் கெட்டி யாய்ப் பிடித்துக்கொண்டு அது பின்காலால் உதைப்பதையும்

கீழே தள்ளுவதையும், மொரட்டுத்தனமாய் இழுப்பதையும் எப்படியாவது கிராமம் போய்ச்சேரவேண்டுமென்ற ஆசையால் ஸஹித்கொண்டிருந்தும் அவன் இஷ்டப்படி கிராமத்தையடையாமல் போவதோடுமாத்திரமாயில்லாமல் அனர்த்தத்தையுமடைகிறான்.

இதுபோலவே வஞ்சகனான ஆசாரியனையடுத்தால் அனர்த்தமே விளையும். அறிவில்லாத ஆசாரியனையடுப்பதும் குருடனை அடுத்த மற்றொரு குருடன் குண்டிலும், குழியிலும், கல்லிலும்' முள்ளிலும், விழுந்து கஷ்டப்படுவது போலவே ஆகும். ஆகையால் சிறந்த அறிவுள்ள தயாளுவான உள்ளதை உரைப்போனான ஸதாசாரியனை ஆச்ரயிக்கவேண்டும். அந்த ஆசிரியன்தான் சிஷ்யர்களது புத்திபரிபாகத்திற்கேற்றவாறு ஆத்மதத்துவத்தை உபதேசித்தருள்புரிவார். பணத்தை விரும்பியவனுக்குப் பணக்காரன் அதைப் பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுப்பது போல் ஞானமென்பது எடுத்துக் கொடுக்கக் கூடியதாயில்லாதது பற்றி எவ்வாறு ஆசாரியர் சிஷ்யனுக்கு ஞானத்தைப்புகட்டுவார் என்று சங்கை செய்ய இடமில்லை. ஆசாரியர் தன்மனதில் நிறைந்திருக்கும் ஞானத்தை தனது அருள்வாய் மொழிகள் வாயிலாக சிஷ்யன் மனதில் புகட்டுவார். பொதுவாகவே ஒருவன் மனதிலுள்ளதை மற்றவன் மனதில் புகும்படி செய்வதற்காகத்தானே எழுத்து வடிவமான சப்தமேற்பட்டிருக்கிறது. அன்றியும் மீன் முதலியவைகள் பார்வை முதலிய உபாயங்களாலேயே குட்டிகளைப் போஷிப்பது போலவே ஆசார்யனும் கருணாகடாக்ஷத்தால் சிஷ்யனை கிருதார்த்தனாக்கிவிடுவார். இதனாற்றான் தர்சன தீக்ஷை, ஸ்பரிசனதீக்ஷை, மாந்திரிகதீக்ஷை, முதலிய தீக்ஷாக்ரமங்கள் சிஷ்யானுக்ரஹத்தின்பொருட்டு, ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது. சத்துருக்களால் இரவில் கண்ணைக்கட்டிக் கட்டி இழுத்து பலாத்காரமாக கோரமான கானகத்தில் விடப்பட்ட காந்தார தேசத்துப் புருஷனைக் கருணையுள்ள ஸாது, அவனது முன்னிலைமையையும், தற்காலம் நேர்ந்த கஷ்டாவஸ்தையையும் கெவனித்து, கட்டையெல்லாம் அவிழ்த்துவிட்டு காந்தாரதேசமுள்ள திக்கையும், அதற்குப்போகும் வழியையும் அவன் மனதில் படும்படி உபதேசித்து ஸ்வஸ்தனாக்கி ஸுகமாயிருக்கச் செய்வதுபோல் ஸச்சிதாநந்த வடிவமான ஸ்வஸ்த நிலையிலிருந்தவனை ஸம்ஸாரகானகத்தில் கொண்டுவந்து விட்டு கஷ்டப்படுத்தி

னதைக் கண்டு ஸதாசாரியன் அவனது பாரமார்த்திகமான ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை அவனனுபவிக்கும்படி செய்து தன்னைப்போல் அவனையும் ஆனந்தமாக்கிவிடுவான். இதுபோன்ற அளவற்ற மஹிமை பொருந்திய ஆசார்யபக்தியே ஸர்வசிரேயஸ்ஸுக்கும் காரணமென்பது சாஸ்திரங்களின் கருத்து. சாஸ்திரங்களென்பன தரிசனங்களெனப்படும். அவை நாஸ்திக ஷட்தரிசனமென்றும் ஆஸ்திகஷட் தரிசனமென்றும்பிரசித்தமானவை. நாஸ்திகஷட்தரிசனீ என்பது நாஸ்திகன், நான்குவகைப்பட்ட பௌத்தர்கள். ஜைனன், ஆகிய ஆறுபேர்களால்பிரவிருத்திவிக்கப்பட்ட மதங்களாகும். அவைகள் பிரமாணமூலமாக ஆராய்ச்சிசெய்யும்பொழுது நிலைக்கமாட்டாது. ஆகவே அவைகானல்நீர்போல் கண்டழிந்துபோகக் கூடியதாகக் கருதப்படுகின்றன. ஆஸ்திகஷட்தரிசனமென்பதோ அப்படியல்ல வையாஸிகதரிசனம் தவிர மற்ற ஐந்து தரிசனங்களும் வியாவஹாரிக தசைக்கு வேண்டிய ஸாத்யஸாதனாதி பிரிவினைகளை போதித்து பிரயோஜனப்படுகின்றன. வையாஸிகம தம் வியாவஹாரிக நிலைமையை அனுவதித்து பாரமார்த்திக நிலைமையைப் புகட்டி பிராணிகளை புனிதப்படுத்துகிறது. இந்த ஆஸ்திக ஷட்தரிசனியின் ஆசாரியர்கள் கணாதர், கௌதமர், ஜைமினி, கபிலர், பதஞ்சலி, வியாஸர் ஆகிய மகரிஷிகளாவார்கள். கடபடாதிகளை வஸ்துக்களைக் காணக்கண்போல் இம்மைமறுமைப் பலன்களைக்காணக் கண்ணுக்கொப்பானவைகளாம் இத்தரிசினங்கள். இவைகள் முறையே படிக்கட்டு வரிசைபோல் முத்தி நிலைபெற மேல்மேல் நிறைந்த சாதனங்களாகும். மேன் பார்வையாய்ப் பார்த்தால் இவைகளுள் ஒன்றற்கொன்று விரோதமுடையது போல் தோன்றினும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யின் பாரமார்த்திக புருஷார்த்தத்திலேயே முடிவு பெறுமென்றும் மஹான்களினபிப்பிராயம். இவைபோன்ற ரஹஸ்யங்களை வெளிப்படுத்துவதிலிருந்தே ஆசாரியாளது மஹிமை விளங்கும். அந்த ஆசாரிய சரணத்தில் ஈடுபட்டு யாவரும் க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம். ——— பத்திராதிபர்.

ஆரியாசார ரகஸ்யம்.

பும்ஸூவன இரகஸ்யம்.

(534-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்திரீகளிடத்தில் அக்குற்றம் நேர்ந்தால் அன்னிய பிந்துவானது அவர்கள் சரீரத்தில் அன்னிய சம்பந்தமாத்திரத்தால் கலத்தலால் பலவழியிற் பச்சாத்தாபம் பின்னாடையினும் மாற்றமுடியாது. அதற்கு ஏதேனும் ஒரு பிராயச்சித்தம் செய்தாலும் அது சரீரத்தைவிட்டு மாறுவதுகூடாது. பாபிந்து சரீரத்தில் வியாபித்தால் அதை மாற்றுவது எவராலும் கூடாதெனக் கொண்டார். வைத்தியமறிந்த பண்டிதர் தொத்துவியாதிகளில் என்றும் பிந்துசம்பந்தத்தால் உண்டாகும் ரோகங்கள் எவ்வித சிகிச்சையாலும் மாறாது அசாத்தியமென தன்வந்திரிபகவானும் சொல்லுகிறார். அது நியாயமே. எதனாலெனின், ஒருபெருத்த மஞ்சல் நீரில் ஒரு குன்றிபளவு சுன்னத்தைப் போட்டால் க்ஷணத்தில் அவையெல்லாம் சென்னிறமாகின்றது. பிறகு எவ்வித சிகிச்சையாலும் அந்நிறம்மாறாது. நிறம்மாற வழியேதேனும் உளதேனும் காரம் ஏறியது ஏறியதே பாருங்கள். சூட்சுமமாய் விஷம் சரீரத்திலேறி சிகிச்சைசெய்து அதை ஒழித்தாலும் அதன் வேகத்தால் சரீரத்துக்குண்டாம் கெடுதி உண்டாகியே தீரும். மேலும் அதற்குச் செய்யும் எவ்வித சிகிச்சையின் பலனும் தற்காலம் தோன்றும் பெருங்கெடுதிகளாகிய மாறுதிகளைத் தடுப்பதன்றி வேறில்லை. வெறிநாய்க் கடித்தால் அதன் விஷத்தை நல்லமருந்தால் மாற்றினாலும் இருபது வருடங்களுக் கப்புறம் கடிபட்டவனுக்கு மாணம் நேரிடின் அன்றும் குறைத்து உயிரைவிடுதல் கண்டது கேட்டதுமான உண்மை. இப்படியே சில எலிக்கடிக்கு மருந்து செய்திட்டாலும் அது மாணகாலம் வரையில் இருந்து உடம்பை இளைக்கச்செய்து இருமச் செய்யும். இப்படி விஷயங்களும் காரமும் சரீரத்தில் ஊருவதியல்பாதலால் அதுபோலவே பிந்து சரீரத்தில் இறங்கியவுடனே சரீரமெல்லாம் வியாபித்து ரத்தத்தைப்பற்றி நிற்குமாதலால் அதைமாற்ற அப்புறம் அப்பெண்ணேனும் புருஷனேனும் மற்ற வைத்தியரேனும் மாற்ற

வல்லவராகார். அவர்களுக்குப்பிறகு எவ்வளவு பச்சாத்தாபம் நேர்ந்திடினும் அதற்கு சிகச்சை ஒன்றுமில்லை. பண்டிதர்காள்! இங்ஙனமாயின் நிற்பந்தத்தால் கற்பழிந்த மாதருக்கும் கதி நிற் கதிதானேவெனில், அவசாம் வேண்டாம். அவ்விதமான சங்கடங் களிற் சாஸ்திரமும் யுக்தியும் சிகிச்சையும் மூன்றும் ஒன்றுபட்டு அவர்களுக்கு ஓர்வழி விட்டிருக்கின்றது. அதில் வேறு காரண மிருந்தால்மட்டும் முற்றும் தொலைத்திட வேண்டியதே. உலகத் தில் மாணமென்பது நூறுக்குமேல் அல்லது முன்னுவது வியாதி யாலாவது அல்லது வயதுக் கிரமத்தினுலாவது உண்டாகும். ஆதலால் அதை தடுக்கமுடியாது. நிற்பந்தத்தாலுண்டாயின் அது சிலவிடத்தில் தடைப்படும், அப்படியே இங்கும் பெண்களை நிர்ப்பந்த சம்பந்தமின்றி காப்பாற்றவேண்டியது நமது கடமை. அதினுலேயே ஊக்கத்துடன் பெண்களை ரக்ஷிக்கவேண்டுமென்று ஆசிரியர் கூறினர். உலகத்தில் ஒருவன் தவறி மாணத்தையடை வானேயானல் அவனுக்கு மீட்சியுண்டோ? இங்குள்ள உண்மை இது. விஷமென்பதிருவகைப்படும். ஒன்று அறியப்படாதவரை பயன் கொடுக்காது, மற்றொன்று எப்படியாயினும் பயன் கொடுக்கும். எந்தவிஷம் நாடிகளிற்சேர்ந்து அவற்றை வரைக் கச்செய்து பிராணனை வெளிக்கிளப்பும் இயல்பினது. அதுவே அறியப்படாத நிலைமையில் பலனைஉண்டாக்காது. மற்றது ரத்தம் எலும்பு முதலிய வழிசரீரத்தில் வியாபிக்கும் இயல்புளவாதலால் அவை சரீரத்தில் சேர்ந்து ஒருவாறு காலத்தால் பயன்தரும் அதனை அனுபவிக்க அறிந்தாலும் அறியாமற்போயினும் குற்ற மில்லை. ஏனெனில் அறிந்து தொட்டவனுக்கே அக்கினிச்சுடும் மற்றவனுக்கு சுடாது என்பதுபோலிது பரிகாச வாக்யமல்ல. பாவனையே சில விஷயங்களிற் பலத்தைக் கொடுப்பதாம். அப் பாவனை நாடிகள்நிறைந்த இச்சரீரத்தில் நாடியைபப்ற்றியே நிகழ் வது. இதனுண்மையை ஜாபாலோபநிடதத்திற் பார்க்கலாம். அவ்வுபநிடதம் எல்லா அறிவுகளும் நாடிகளில் நிகழ்வதென்றே குறிக்கின்றது. பெரியதோர் சுகத்தாலும் பெரியதோர் துக்கத்தா லும் பெரியதோர் பாபரப்பாலும் (அவை உடனே நேர்ந்தால்) பிரமித்து மனிதர் நிற்குங்கால் நாடிகள் பிராணனை யொழித்து விடுமென்பது சித்தம். இங்ஙனம் ஏழையாயுள்ளவனுக்கு நிதி கிடைத்த சுகத்திலும் புத்திரசோகம் முதலிய பெருந்துயரங்களி

லும் பெரும்புலியை.காண்பதில் பெரியபாபாப்புக்களிலும் அநேகர் மரணமடைகிறார்களென்பது ஸம்பாவிதமே. சில வருடங்களுக்கு முன் ஓர் கைக்கொள்வன் நூல்வாங்க ஓர் ஊருக்குச்சென்று அங்கு அதைவாங்கி மூட்டைக் கட்டும்பொழுது கையில் ஏதோ சுருக்கென்று கடிக்கக்கண்டான். அவன் அதைசிறிதும் கவனிக்காது வேறு வழியில் தன் புத்தியை செலுத்தி மூட்டையெடுத்து ஊர்வந்து சேர்ந்தான். வந்தும்சிலதினம் தன்தொழிலை முறையே செய்து வந்தான். கிரமமாய் செய்து வருங்கால் ஒருதினம் ஒரு மூட்டையை அவிழ்த்திட அதில் ஒரு சிறிய பாம்பு மரித்துக் கட்டப்பட்டிருந்ததைக்கண்ட மாத்திரத்தில் அப்பொழுதே அதனால் கடிக்கப்பட்டான்போல் மூர்ச்சையடைந்து ——யும் விட்டான். இப்படி பல கதைகளும் கேட்டோம் மேல்கதையைக் கண்டோம். இவ்விதம் விஷங்களுடைய ரீதிகள்பல விதமென்பது சித்திராரூடமென்னும் புஸ்தகத்திற் பார்க்கலாம். இப்படியே பாம்பின் விஷமானது செவ்வாய்க்கிழமையில் மிகக்கடூரமாமென்று, மந்திர சிகிச்சை கற்றவர்களும் அந்த சிகிச்சை செய்வதில்லை. செய்தாலும்பயனடைவதில்லை. இப்படியே ஆயில்யம் கிருத்திகை பரணிகிருஷ்ணாஷ்டமி சூரிய கிரகணம் முதலியகாலங்களிலும் தேவாலயம் எட்டிமரத்தினடியிலும்மயானத்திலும் நாணற்கூட்டத்திலும் புற்றினுள்ளிலும் மற்றுமுள்ள சிலவிடங்களிலும் விஷந்தீண்டினால் அது மீளாதென்பார்கள். நீலகண்ட கல்பம் கருடகல்பாதிகளில் இது நன்கு கூறியிருக்கின்றது. பெண்களின் பாவனையில்லாது உள்நுழைந்த பிந்துவானது எங்கும் வியாபித்தல் கூடாது. எங்ஙனமெனில் நீரால் நனைந்த சுண்ணாம்பு எண்ணெயில் குழைத்த மஞ்சலின்கண் இடப்பட்டாலும் அது எங்கும் பரவி சென்னிறத்தை யுண்டாக்குவதில்லை. காரமும் பரவுவதில்லை. சுண்ணாம்பையும் மஞ்சளையும் சேர்க்க ஓர் நிகழ்ச்சியுள்ள வஸ்து வேண்டும். ஓர் புறத்தேமட்டும் அது இருந்தாலும் பயன் கொடுக்கும். எவ்வளவு சேர்ந்திருந்தாலும் இரு வஸ்துக்களிலும் ஒன்றுக்கொன்று விருத்தமான பொருளிருந்தால் அது பயன்தராது. அப்படியுண்டாக்கினும் ஒரே ஜாதியான திரவிய சம்பந்தத்தாலுண்டாவதுபோல் அவ்வளவு சிலாக்கியமாய் உண்டாகாது. அவ்விதமானது ஏதோ ஒருபுறத்தில் நிகழ்ச்சியை விருத்தி செய்யவும் அல்லது ஒன்றிற் குறைக்கவும் தக்கதான

சாதகபாதகப் பொருள்களைச் சேர்த்திட்டால் அனேகமாய் அதன் பயனும் தொலையும். சிறிது மிகுதியிருந்தாலும் அதே உபாயத்தைப் பன்முறை திருப்பினுல் அதுவுங்குறையலாம். ஓர்படியளவு மஞ்சள்தூளை ஓர் சுண்டை அளவுள்ள சுண்ணும்பு சென்னிறமாக்காது, அப்படி பாவமில்லாத ஆண்பெண்கள் ஏதேனும் காரணவிசேஷத்தால் நெருங்கினுலும் குற்றமில்லை உதாரணமாக—ஓர் விரக்தன் இருளில் ஓர் திண்ணையில் தூங்குகிறுனென வைத்துக்கொள்வோம். ஓர் பெண்ணும் பெருத்த இருளைக்கண்டு பயந்து ஏதோ ஒரு காரணத்தால் அவ்வகத்தின் திண்ணைசேர்ந்து அங்கு மாவுரிபோர்ந்து தூங்கும் மனிதனை மரமென்றே நினைத்து அவனருகில் நெருங்கிச் சிலகாலம்படுத்திருந்து எழுந்துசென்றுள். இங்கிருவருக்கும் பாவ தோஷமும் சரீரதோஷமும் சிறிதுமில்லை. இனி ஒருபக்ஷம் மஞ்சட்டூளில் ஒரு சுண்டையளவு ஈரச்சுண்ணத்தை வைத்தால் அது அவ்வளவையும் சென்னிறமாக்காது சிறிது இடத்தையே கெடுக்கும். இங்ஙனம் மகா காமமுள்ள புருடனுல் காமமற்ற பத்தினிகளனுபவிக்கப்படினும் ஏற்கும்பாவமின்மையால் பரிபூரணமாய் அங்கு பிந்து வியாப்தி உண்டாகாது. மேல் நீரில் கரைத்த மஞ்சளில் எண்ணெய் கலந்த சுண்ணும்பு எவ்வளவு உருட்டிப்போட்டாலும் அது அம்மஞ்சளிற் கலக்கவே கலக்காது. இங்ஙனம் இடப்பட்ட சுண்ணம் காலம் சென்று ஊரி கலந்தாலும் கலக்காதது போலவேயாம். அதனிடத்தே காரம் மட்டும் கலக்குமானுல் அதை ஒருவழி ஒழித்திடின் குற்றமற்றதாம். அப்படித் திருடர் முதலியோரால் பலாத்காரம் செய்தனுபவிக்கப்பட்ட பெண்களுக்குக் காமமின்மையானும் விபரீதபாவமிருத்தலாலும் பிந்து வியாப்தியும் சுகமுமில்லை. அப்படி பிந்துவியாப்தி இல்லாமையால் சிறிதுட்சென்ற பிந்து வெளியேறத்தக்க பிராயச்சித்தம் அங்குவிதிக்கப்பட்டது. தனது புருடனென நினைத்து மற்றவனிடத்து தவறிக்கலந்த பெண்ணுக்கும் இதுபோலவே பாவம் விபரீதமாதலால் அதுவும் இது போலவேயே. அதுகொண்டே வியாஸாசாரியாரும் தன் புருடன் தானே நினைத்து ஸ்ரீ நாராயணனைக்கலந்த பிருந்தையை குற்றமற்றவளென்றுர். வால்மீகி தேவராஜனென்றறிந்து அன்னியனைக்கலந்த அகலியயை குற்றமுற்றவளென்றுர். ஆகவே குற்றமில்லாத பெண்களிடத்தே சத் ஸந்தானம் சித்திக்குமாதலின் நற்

சந்தானத்தை எதிர்பார்க்குமாரியர் அவர்கள் விருப்பமறிந்து நியமமறிந்துகாலதேசமறிந்தும் கற்பறிந்துகலந்துநற்புத்திரப்பேறு பெறுவாரென்பது எல்லா மேதாவிகளும் ஒப்பத்தக்க உத்தமாசாரமாமென்பது ஓர்சிறிது.

ஆரியன்.

நையாயிகருக்கும் வேதாந்திக்கும் ஸம்பாஷணை.

நிர்குணவாதம்.

ஐயா, ஒரு தார்க்கிகன் ஒரு குளக்கரையில் ஓர் வேதாந்தியைக் கண்டு பரிஹஸித்தான். ஓ வேதாந்தியாரே உமக்கு அத்துவித சித்தாந்தத்தில் நன்றாக மனம் பதிகின்றதா? ஓய் ஏதோ ஒரு நிர்குணவஸ்து உண்டென்று உமது ஸித்தாந்தம் சொல்லுகிறதாமே? ஓ பண்டிதரே அப்படி ஒரு வஸ்து நிற்குணமாயிருக்குமோ? எந்தப்பொருளும் ஸகுணமாகவே இருக்க ஒரு பொருள்மட்டில் நிற்குணம் என்றால் அதை எப்படி நம்புவது பாரும். மேலும் அந்த நிர்குண பிரம்மம் உலகத்துக்குக்காரணமென்கிறீர். சரீரமில்லாத தகப்பன் பூர்ணாங்கமுள்ள பிள்ளையைப் பெற்றான் என்பது போலவல்லவோ இதாகின்றது. ஸகுணப்பிரபஞ்சம் நிற்குணத்தில் தோன்றுமா? போகட்டும் நிற்குணமானவஸ்து இருப்பதுதான் எப்படி அறியப்படும். அப்பொழுதில்லையென்றும் சொல்லலாமே, நாத்திகமா அத்துவிதம், ஹீ ஹீ என்றான். அவனைக்கண்ட வேதாந்தியார் அவன் செய்யும் பரிஹாசத்தை மிக்கப் பொறுமையோடு கேட்டார். உடனே அவனறியாமைக்குமாராய்ச்சிக்கும் வருந்தி கருணைகாட்டி ஓர் விடை கொடுத்தார். ஓ பதார்த்த சோதனசூர! நியாய சாஸ்திரீ! உமது மதத்தில் உண்டான பொருள் ஒருக்கணம் நிற்குணம் ஒன்றுண்டல்லவா? ஆயின் ஒவ்வொரு நிமிஷத்தும் உண்டாகும் அனந்தகோடித் திரவியங்களும் ஒவ்வொரு கணத்திலும் நிற்குணங்களேயன்றோ. மேலும் பாரும் 1000 நூலாடையில் ஒன்றுசேர்ந்தாலும் ஒன்று கழிந்தாலும் அதுவெவ்வெறு பொருளாகவல்லவோ உண்டாகிக்கொண்டு வருகிறது. ஆயிரநூலாடை மீண்டும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது நூலாடை நானை ஆயிரத்தோருநூலாடை எனவாம். பிரிவுகளால் அது வேறுபடுகி

றது. இதிலும் காற்று முதலியவற்றால் ஒரு அணுப்போனாலும் வந்தாலும் எல்லாப்பொருளும் ஒவ்வொரு க்ஷணத்திலும்நிற்குணமாம் அல்லவா? நிற்குணம் ஸகுணமாகின்றது. ஸகுணம் நிற்குணமாகின்றது. இப்படி மாறியேயல்லவோவரும். மேலும் தார்கிகரே பாரும். மழை பெய்துகொண்டிருக்கும்பொழுது குளம் நிறைகிறது. சில திவலைகள் கணம்தோறும் ஏறுதலால் கணம்தோறும் பொருளும் வேறுபடுகிறதாகவேண்டும். ஆயின் கணந்தோறும் அந்தக் குளம் நிற்குணமாவதும் ஸகுணமாவதுமாய் நிற்பதாயிற்று. இதுவும் நிற்க, உமது சரீரமும் எமதுசரீரமும் விர்த்தியடைவதாலும் குறைவதாலும் வேறுபடுவதென்பது வாஸ்தவமல்லவோ? அதுவேறுபடுங்காலெல்லாம் வேற்றுமைப்பட வேண்டுவதுதானே. பழய சரீரத்துக்குப் புதுசரீரம் எப்பொழுதும் வேறுபட்டதாயிற்றே. அப்படிக்கி உண்டாகும் மாறுபாடு திடீரென்று தற்செயலாய் உண்டாவதில்லையே. கிரமமாயல்லவோ உண்டாகின்றது, அப்படியானால் ஒவ்வொரு க்ஷணத்திலும் ஏற்றமும் தாழ்வும் உண்டாகத்தான் வேண்டும். அது சூக்குமமாதலால் அறியப்படாமற்போனால் போகட்டும். அப்பொழுது ஒவ்வொரு க்ஷணத்திலும் பழய சரீரம் மாறி புதுச்சரீரம்உண்டாக இடையே ஒருநிற்குணம் வேண்டுமே. அப்படியானால் உமது சரீரம் க்ஷணந்தோறும் நிர்க்குணம். இங்ஙனம் பார்த்தால் ஒவ்வொரு பதார்த்தமும்க்ஷணம்தோறும்நிற்குணமாகவேண்டும். அப்படியிருக்கபிரம்மமட்டும் நிற்குணமாவதெப்படியென்று ஏன் ஆக்ஷேபித்தீர். உமது துராக்கிரகத்தை விட்டுகேளும். சகுணமாயுள்ள குடம் முதலிய எல்லாப்பொருள்களும் நிற்குணத்தின் காரியமே அல்லவோ, அப்படியானால் அது முதலும் மற்றது பின்னுமே உண்டாகவேண்டும். ஆகையால் காரண வஸ்து நிற்குணமும் காரியம் சகுணமுமாயிற்று. மேலும் நன்னாற்றமுடையதும் தீநாற்றமுடையதுமான இருமண் துண்டுகளால் உண்டான ஓர் குடம் எப்பொழுதும் நிற்குணமென்று உம்மவர் வழங்குவதல்லவோ. அப்படியாயின் 'அங்கமில்லாத பிதா பூர்ணாங்கனான பிள்ளையைப் பெறுவானோ' என்று நீவிர் வினவிய வினா பயனற்றதாயிற்றன்றோ. மேலும் பச்ச ஓந்தியென்ற ஓணானை நீர் பார்த்ததில்லையோ, அது அடிக்கடி நிறமாறும் சரீரமுடையதன்றே. ஆனால் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பல்லுருவம் மாறிவருவதால் டை

இடையே நிர்குணமாய்த்தானே இருக்கவேண்டும், இங்ஙனமாயின் என்மதத்தில் பிரமம் ஒன்று நிற்குணம். மற்றதெல்லாம் சகுணம். உமது மதத்தில் பிரம்மம் ஒன்றே சகுணம் மற்றவையெல்லாம் நிற்குணம். பண்டிதரே ஆராய்ந்துபாரும். திரவியம் குணம் கர்மம் சாமானியம் விசேஷம் சமவாயம் அபாவம் என்று ஏழு பதார்த்தங்களல்லவோ உமது சாஸ்திரத்திற் சொல்லப்பட்டது. அவைகளில் குணம் முதலிய ஆறுபதார்த்தங்களும் நிற்குணமென்று நீரே ஒப்பினீர். மேல் நிரூபித்தவழியால் மற்ற திரவியமும் பெரும்பான்மையில் நிற்குணமாயிற்று. அப்படியானால் சாஸ்திரமதமேலீட்டினாலன்றோ வேதாந்தியை பரிகசித்தீர். சாதுக்களான வேதாந்திகள் எல்லாவற்றையும் சகுணமாக ஒப்பி, பிரமம் ஒன்றைமட்டில் நிற்குணமென்பார். அவரை நீர் பல பாகத்தில் ஜயிக்கமுடியாது. பாரும் 'நிற்குணம், நிஷ்கிரியம், காணப்படுவதெல்லாம் உமது மதத்தில், காணப்படாத பிரம்மம் ஒன்றே வேதாந்தி மதத்தில் நிற்குணம், இப்படியிருக்க ஒற்றைக்கண்ணனை ஒருவன் ஒன்று குறைய நூறுகண்ணுடையானைப் பரிகசித்தாற்போல் நீர் வேதாந்தியை பரிகசிக்கிறீர். வேதாந்திகள் என்றும் உண்மைபேசுவார் என்றும் இத்தார்க்கீகர் விதண்டாவாதிகளென்றும் நான் கேட்டதுண்டு. அதின்று பிரத்யக்ஷமாயது என்று வேதாந்திகூற அதைக்கேட்டு தார்க்கிகன் தன் சித்தாந்தத்தை ஒருவாறு பரிசீலித்து உண்மையறிந்து சாஸ்திரமதம் முடித்து அன்னிற்குண ரகசியத்தை உபதேசிக்கும்படி வேதாந்தியைச் சரணமடைந்தான் என்பது நிற்குண ரகசியம்.

இருளும் ஒளியும்,

ஓர் நையாயிகர் ஓர் வேதாந்தியைக்கண்டு ஓய் வேதாந்தி ஏதைய்யா முற்றிலும் அசம்பாவிதமாய் பிரகிருதி புருஷன் இரண்டும் சேர்ந்து உலகமென்கிறீர். ஓய் அஸ்தி (இருக்கின்றது) பாதி (விளங்குகின்றது) பிரியம் (விரும்பத்தக்கது) ரூபம் (அமைப்பு) நாம, (பெயர்) இவ்வைந்தும் கலந்ததே உலகமென்கிறீர். உமது ஆசாரியரும் 'பொய்யையும் மெய்யையும் கலந்ததே உலக விவகாரம் என்றார். ஹீ ஹி நண்பரே! இருளும் ஒளியும் சம்மந்தம் செய்துகொண்டகதை தெரியுமோ! நன்றாயிருக்கிறது. இனி, எங்கேனும் நெருப்பும் நீரும் கலந்தி

ருக்குமோ. உஷ்ணமும் சீதமும் சேருமோ, தெளிவும் மயக்கமும் கலக்குமோ, ஆகையால் சேதனாசேதன ஐக்கியவாதத்தை இனி நீர் விட்டுவிடும் என்று கேட்டார். புன்னகைகொண்டு வேதாந்தியார் மறுமொழி கூறுகின்றார் நையாயிகரே! உம்மவர் ஒவ்வொரு பதார்த்தத்தையும் சோதிப்பதில் மிக வல்லவரெனக் கேட்டோம். உமக்கு பதார்த்தங்கள் ஏழுதானே. இருளென்பது ஒளியின் அபாவமல்லவா; அப்படியே நீரும் நெருப்பும் திரவியங்களே, உஷ்ணமும் சீதமும் குணங்களே. தெளிவும் மயக்கமும் குணமே. அப்படியிருக்க இரண்டு திரவியங்கள் சேராதென்று என் பிடிவாதம் பிடிக்கிறீர். ஒருகையில் ஓர் பனிக்கட்டியையும் ஆலங்கட்டியையும் வெறும்நீரையும் தொட்டுப்பாரும். அதே கையால் சமுத்திரநீரையும் கிணற்று நீரையும் சூரிய கிரணம்படாத சுனை நீரையும் தொட்டுப்பாரும். இவ்வளவிலும் ஒரே மாதிரிக் குளிர்ச்சி தோன்றுகின்றதா. அப்படியிருப்பதில்லையே. ஓரிடத்திலுள்ள குளிர்ச்சி கையில் ஊசிகுத்துகிறது போல் குத்துகிறது. மற்றொன்று நாம்புகளை மடக்கச் செய்கிறது. மற்றொன்று உடம்பைநடுக்குகிறது. மற்றொன்றுசுகமான குளிர்ச்சியாயிருக்கிறது. மற்றொன்று உடம்பை விறைக்கச்செய்கிறது. இவ்வளவு வேற்றுமைகள் குளிர்ச்சியில் எதனால்? நீர் ஒரு சமயம் குளிர்ச்சிஅதிகம் குறைவாயிருத்தலால் அப்படியென்பீரோ? அப்படியானால்என்ன. பனியிலும் ஆலங்கட்டியிலும் குளிர்ச்சிமட்டும் இருக்கின்றது மற்றதில் வெப்பம் கலந்ததென்றல்லவோ கருத்து. அப்படியானால் வெப்பம் என்பது அக்கினியின் குணமாதலால் அது குணியை விட்டிராது. ஆகவே அன்னீரில் அக்கினி கலந்ததென்றல்லவோ சொல்லவேண்டும். நையாயிகரே சீதோஷ்ணங்கள் கலந்ததெப்படி? நீர்தான் சொல்லும். மேலும் வித்வானே! சிறிது ஆலோசியும். ஒருவன் வழியே நடந்துபோனான். இரண்டு ஈயத்துண்டுகள் கிடக்கக்கண்டான் அவற்றைக்கண்டு இங்கே ஈயமும் வெள்ளியும் கலந்து கிடக்கிறதென்று நினைத்தான், மெள்ள அவற்றைப் பொறுக்கி இடுப்பில் இறுக்கிக் கட்டி வீடு சென்று நெருப்பிட்டு உருக்கினான், உள்ளது ஈயமாயது. ஆதியிற் கண்டது ஈயம்தானென்று நிச்சயித்தான். இவனடியில் அடைந்த அறிவு மயக்கம். அவ்விஷயத்திலும் அவன்செய்த முயற்சி வீணே. ஒவ்வொரு மயக்கத்திலும் காணப்டுவது

பொருளென்பதுவரை வாஸ்தவமாதலால் அதை இன்னபொருள் என நினைப்பது மட்டும் மயக்கமாயினும் அதை முற்றும் மயக்கமென்பது தப்பு. ஆகவே எங்கும் மயக்கம் தெளிவுடன்தான் கலந்திருக்கும். உண்மையறிவுமட்டில் தனித்திருக்குமேயன்றி மயக்கம் எங்கும் தனித்திராது. இப்படியே மயக்கமாகிய உலகமும் சச்சிதானந்தமாகிய பிரமத்துடன் கலந்து நிற்கிறது. இருளும் ஒளியும் ஒன்றிருக்குமாவென்று சந்தேகிக்கின்றீர். சற்று ஆராய்ந்திடும். வெயில், நிலா, விளக்கின் ஒளி இவைகளின் தாரதம்மியத்தைச் சற்றுகவனியும். அவ்விளக்கிலும் எண்ணெயின் தாரதம்மியத்துக்கேற்றவாறு ஒளியும் வேறுபடுகிறது. ஆனால் இதில் சூரியகிரணம் இருள் சம்பந்தமில்லாததும் மற்றதில் இருள் சம்பந்தம் உண்டேயன்றோ சொல்லவேண்டும், அப்படியானால் என் இருளும் ஒளியும் கலந்திருக்குமாவென்று சந்தேகிக்கின்றீர். உமக்கிதிலும் சம்சயமிருந்தால் ஒரு முக்கோணவடிவமான இடத்தில் இரண்டு மூலைகளில் இரண்டு தீபங்களைவைத்து மற்றொரு மூலையில் ஓர் பதார்த்தத்தை வைத்துப்பாரும். அப்பதார்த்தத்தின் அடிதொடங்கி முதலில் முக்கோணமாய் மிக்க கருத்தநிழலிருக்கின்றது அதற்கப்புறம் பக்கங்களில் சிறிது தூரம் வரை சூக்ஷ்மமாய் சாம்பல் வர்ணமான ஓர்வகை நிழல் தெரிகின்றது அது ஒப்பின் அபாவமா? அல்லது ஒளிதானா? இரண்டும் கலந்ததா? ஆலோசித்துப்பாரும் அவசரப்படாதேயும். ஒளியின் சுபாவமே அப்படியிருக்குமென்பீரேல் பிரகாசத்துக்கு அப்பிரகாசம் சுபாவமென்பது பெரும் தவறன்றோ. இடத்தின் தூரத்திலாவது மேடுபள்ளம் முதலியவற்றிலாவது மற்றெந்த அமைப்பாலாவது ஒரு நிலம் வேறுபடுமோ? அதற்கு நாற்றம் என்ற குணமும்தான் இல்லாதிருக்குமோ? அப்படியிருக்க "சேதனாசேதனசங்கரம் வருகிறது. அப்படியாவது சீதோஷ்ணங்களுக்கும்மயக்கம் தெளிவுக்கும் நீருக்கும் நெருப்புக்கும் ஒற்றுமைபோல்" என்று பரிஹசித்தீர். அவையுமுண்டு இதுவுமுண்டென்று யாம் காட்டின பிறகேனும் உண்மையறிந்தீரா? இவ்விதம் நையாயிகரை நோக்கி வேதாந்தி சொல்ல அவரும் உண்மையறிந்தார்.

நிர்விகல்பஞானம்,

ஐய, வேதாந்தீ ! நிர்விகல்பமாயும் அகண்டமாயும் ஓர் அறிவுண்டாவதெனச் சொல்லுகிறீரே. அது சாத்தியமா ? அறி

வெல்லாம் ஓர் சுபாவமுள்ளதைப்பற்றியே இருப்பதால், நீர் உலகத்திலுள்ள எல்லா விசேஷ அறிவுக்கும் நிர்விகல்ப அறிவே காரணமென்றும் சொல்வது கூடாது என்று நையாயிகர் வினவ வேதாந்தி சமாதானம் கூறுகிறார்.

ஓ நையாயிக: உமது மதத்தில் ஒவ்வொரு அறிவுக்கும் அவ்வறிவின் விஷயங்களின் தனியறிவேயல்லவோகாரணமாகின்றது. இதில் "இது குடம்" என்ற அறிவில் கடஜாதி ஒன்றும், கடம் என்ற பொருள் ஒன்றும், அவ்விரண்டின் சேர்க்கை ஒன்றும் தோன்றுகின்றதல்லவா? இவ்விதமான குடம் குடச்சாதி அவற்றின் சம்பந்தங்களை முன்னமே தனித்தறிந்திருக்கவேண்டுமல்லவோ? தடியையும் சாத்தனையும் இருவர் செயற்கையும் அறிந்தவருக்கன்றோ தடியன் சாத்தன் என்ற அறிவுண்டாம். ஆகவே பிரஸ்தாபத்தில் குடம் குடச்சாதி அதன் சம்பந்தம் இவற்றின் தனியறிவே " இது குடம் " என்ற கூட்டறிவுக்குக் காரணம். இதையே நீர் நிர்விகல்பஞானமெனச் சொல்லுகிற வழக்கம் உண்டோ? நம்மவருக்கு ஒவ்வொரு அறிவுக்கும் தனித்தனி நிர்விகல்பஞானம் காரணம். எமக்கு எங்கும் நிறைந்த பிரம்மசத்தையும் அறிவு ஒன்றே நிர்விகல்பஞானம். மற்றெல்லாம் சவிகல்பமும் விசிஷ்டஞானமுமாம். இப்படியாயின் ஒரு காசும்கூட இல்லாததரித்திரன் ஒன்று குறைய ஆயிரம் வாரகனையுடைய ஒருவனைப் பிச்சைக்காரனென்று பரிஹசித்தாற்போல் உமது வாதமிருக்கின்றது பாரும். உமது மதத்தில் கண்ணால் காணக்கூடிய பொருளின் அறிவு நிர்விகல்பம். எம்மதத்திலே புலன்களால் அறியப்படாத பிரம்மஞானம் நிர்விகல்பம். இப்படியிருக்க வீண் வாக்ஜாலத்தால் உலகத்தை வஞ்சிப்பது உலகத்து உமக்கு நியாயமாமோவென வேதாந்திவினவ நையாயிகன் வாயடங்கினான்

அநிர்வசனீயமான விசேடம்.

ஐயா வேதாந்தீ ! உலகத்தை நீர் அநிர்வசனீயமென்கின்றீரே இது நியாயமா ? யாம் எல்லா விஷயத்திற்கும் தீர்மானமான லட்சணம் சொல்லுகின்றோமே என்றான் இவ்விஷயத்தைக்கேட்டு கோபமில்லாத வேதாந்தி பதிலளிக்கிறான். ஓ விவாதகம்பீர! சிறிது கேளும். நீர் நிர்வசனஞானன்றோ ? எல்லாபதார்த்தங்களுக்கும் நிர்வசனம் சொல்வீரோ ? ஜாதியென்பது என்ன ? அதற்கு

ஒரு நிர்வசனம் சொல்லுபார்ப்போம். இனி ஜாதி (தன்மை) அகண்டோபாதி (குறி) இவை இரண்டும் ஒழிய மற்றைய பொருள்கள் தான் நிர்வசனத்துக்கு வரும் என்பீரேல், சகோதரரே உமது ஆக்ஞை உமது சிஷ்யனையும் தாசனையும் மாத்திரம் வசப்படுத்துமாயினும் உலகத்தை வசப்படுத்தாதே. பாரும் இரண்டு குடங்களைக் கண்டவன் இரண்டும் வேறென்கிறானே. அதனிடத்திலுள்ள வேற்றுமையை எவ்விதம் அறிவது? வேறென்றே அல்லவோ சொல்லவேண்டும். வெவ்வேறு கபாலங்களான காரணங்களாலுண்டான குடம் வேறென்பீரேல் அக்காரண கபாலங்கள் தான் எவ்விதம் வேறு எனின் 'அதன் காரணமான சிறு கபாலங்கள் வேறாதலாலென்பீர்; அவைதான் வேறு என்பது எதனால் எனின், அவற்றின் அம்சபேதத்தால் என்பீர். அவ்வம்சங்கள் தான் எதனால் வேறெனின், அவைகளின் காரணங்களானதுண்டுகளின் வேற்றுமையினால் என்பீர். அவற்றின் வேற்றுமையோவெனின் சிறு துண்டுகளின் வேற்றுமையாலன்றோ? அவற்றின் வேற்றுமை சிறு தூளிகளின் வேற்றுமையாலன்றோ? அவற்றின் வேற்றுமை அதன் காரணமான மூவணுவின் வேற்றுமையாலன்றோ? அம்மூவணுக்களும் அதன் காரணங்களான ஈராணுக்களின் வேற்றுமையாலன்றோ? அவ்வீராணுக்களும் அவற்றின் காரணங்களான அணுக்களின் வேற்றுமையாலன்றோ? அவ்வணுக்கள் தான் யாதுகாரணம்பற்றி வேறுபட்டனவெனின் அங்கு மெள்ள மெள்ள அவற்றின் விசேஷத்தால் வேறுபட்டனவென்பீர். அவ்விசேஷங்களோ அணுக்கள் தோறும் வேறுபட்டன. அவைகட்கு நிர்வசனமில்லை. அவைகள் அனந்தங்கள். அவ்வனிர்வசனீய அனந்த விசேஷங்களின் பலத்தால் உலகத்தில் ஒன்றுக்கொன்று எல்லாப் பொருளும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. இங்ஙனம் ஜாதிகளனந்தகோடி, அகண்டோபாதிகளோ அளவிலடங்காதன. ஆகவே வெகுதூரம் ஓடி இறுதியில் இடறிவிழுவதைக்காட்டிலும் ஆரம்பத்திற்றானே தோன்றும் வேற்றுமை அனிர்வசனீயமென ஒழித்திட்டால் இவ்வளவு உபத்திரவமில்லை.

(தொடரும்)

ஆரியன்.